*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **17 செப்டம்பர், 2022**

## பத்திரிகை செய்தி

இன்று(17-09-2022) சர்வதேச கடற்கரை தூய்மை தினத்தை ஒட்டி "தூய்மையான கடற்கரை-பாதுகாப்பான கடல்" இயக்கத்தின் ஒரு பகுதியாக நடைபெற்ற புதுச்சேரி கடற்கரைத் தூய்மைப் பணியில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் கலந்து கொண்டு கடற்கரைத் தூய்மைப் பணியைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர். செல்வம், அறிவியல் & சுற்றுச்சூழல்துறைச் செயலர் செல்வி. முத்தம்மா, மாவட்ட ஆட்சியர் திரு. வல்லவன் காவல்துறை இயக்குனர் திரு. மனோஜ் குமார் லால், அறிவியல் & சுற்றுச்சூழல்துறை இயக்குனர் திருமதி. பிரியதர்ஷினி, இந்திய கடலோரக் காவல்படை அதிகாரிகள் பள்ளி, கல்லூரிகளைச் சேர்ந்த நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் தேசிய மாணவர்ப்படை மாணவர்கள், தன்னார்வலர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த கல்வித்துறை நடத்திய பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு துணைநிலை ஆளுநர் சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார். விழாவில் பேசிய துணைநிலை ஆளுநர்,

- மத்திய அமைச்சர் விஜேந்திர சிங் இந்த நிகழ்ச்சிக்காக என்னைத் தொடர்பு கொண்டபோது, கடற்கரையை தூய்மைப்படுத்துவதில் புதுச்சேரி முக்கிய பங்கு வகிக்கிறது. காரைக்காலில் இந்த நிகழ்வை நடத்திக் காட்டியதற்கு புதுச்சேரி அதிகாரிகளையும் மக்களையும் பாராட்டுவதாக தெரிவித்தார். அதற்காக அவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.
- பாரதப் பிரதமரின் பிறந்த நாளான இன்று தூய்மை பாரதத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நிகழ்ச்சியை நடத்துவதில் பெருமை கொள்கிறோம். ஏனென்றால் சுத்தமும் சுகாதாரமும் தான் நாட்டில் நோயை தடுக்கும்.
- இன்று சர்வதேச கடற்கரை தூய்மை தினம். இதற்கு முன்பாக 75 இடங்களில் 7500 கிலோ மீட்டர் நீள கடற்கரை பகுதி சுத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பது இந்த நாட்டின் சாதனை. இந்த தூய்மைப் பணியில் ஈடுபட்ட பொதுமக்கள், அதிகாரிகள், மாணவ-மாணவிகள் அனைவருக்கும் நம்முடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

- கடற்கரையை சுத்தமாக வைத்துக் கொள்வது கடல் வாழ் உயிரினங்களுக்காக மட்டுமல்ல நிலத்தில் வாழும் நமக்காகவும்தான். கடற்கரையில் பல இடங்களில் ஐஸ்கிரீம் கப், கரண்டி, தண்ணீர் பாட்டில், பிளாஸ்டிக் பைகள் எல்லாம் எறியப்படுகிறது. எல்லாம் கடலுக்கு போவதில்லை. அவையெல்லாம் உங்கள் உடலுக்கு திருப்பி வருகிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாம் போடுகிற பிளாஸ்டிக் பொருட்களை மீன்கள் சாப்பிட்டு அந்த மீன்களை நாம் உண்ணும்போது அது புற்று நோயாக நமக்கு வெளிப்படுகிறது.
- நமது உடல் ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்கிறோம் என்ற எண்ணம் நமக்கு வேண்டும். இந்த குப்பைகள் கடலில் பிரணவாயு அளவை குறைத்து நைட்ரேஜன் அளவை அதிகரித்து விடுகிறது. இது எல்லா விதத்திலும் எல்லாருக்கும் கெடுதலை உண்டாக்கும். மேலும், கடல் நீர் மாசுபடும் போது சுற்றுச்சூழலை அதிகம் பாதிக்கிறது. இதை எல்லாவற்றையும் மனதில் வைத்து இன்று கடற்கரையைத் தூய்மைப்படுத்துவது மட்டுமல்லாமல் வருங்காலத்தில் கடற்கரையில் பிளாஸ்டிக் கழிவு பொருட்களை நாம் எறிவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.
- கடல் வாழ் உயிரினங்கள் கடலின் சுற்றுச்சூழலை பாதுகாக்கின்றன. கடல் வாழ் உயிரினங்கள் இறந்து போனால் மிகப்பெரிய சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும். மனிதகுலம் நன்றாக இருக்க வேண்டும் என்றால் அனைவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அதற்கு கடற்கரைப் பகுதிகளை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- இந்த மாபெரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கும் பிற அரசுத் துறைகளுக்கும், தன்னார்வ அமைப்புகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அனைவரையும் பாராட்டுகிறேன்.

என்று தெரிவித்தார்.